**செப்டம்பர் – 02**

# TNPSC துளிகள்

- தமிழ்நாட்டில் 10 வேளாண் பொருட்களுக்குப் புவிசார் குறியீடு பெறுவதற்கு தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது, இதற்காக ₹30 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
  - காஞ்சிபுரம் பரிமிளகாய், பொய்யூர் கத்திரி, சிதம்பரம் கருப்பு உளுந்து, கருமந்துறை கடுக்காய், திருவையாறு இலை வாழை, எறையூர் கருணை கிழங்கு, கடலூர் வெட்டிவேர், மணப்பாறை கத்திரி, ஊட்டி பூண்டு மற்றும் ஜவ்வாது பேய் எள் ஆகியவை இந்த பொருட்களில் அடங்கும்.
- தெலங்கானாவில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய நன்னீர் பூக்கும் தாவர இனமான அம்மானியா தெலங்கானென்சிஸ் என்பது லித்ரேசி குடும்பத்தைச் சேர்ந்த ஒரு வருடாந்திர, குடில் போன்ற அமைப்பு கொண்ட, பகுதி நீர்வாழ் தாவரமாகும்.
- ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (HAL) மற்றும் சாம்டெல் ஏவியோனிக்ஸ் ஆகியவற்றின் கூட்டு நிறுவனமான சாம்டெல் HAL டிஸ்ப்ளே சிஸ்டம்ஸ் லிமிடெட் (SHDS), ஹரியானாவின் குருகிராமில் ஒரு புதிய பாதுகாப்பு ஏவியோனிக்ஸ் உற்பத்தி ஆலையைத் திறந்துள்ளது.
  - போர் விமானங்களுக்கான பல்பணித் திரைகளை (MFDகள்) உள்நாட்டிலேயே வடிவமைத்து, தகுதிப்படுத்தி, தொடர் உற்பத்தி செய்யும் பாதுகாப்பு ஏவியோனிக்ஸ் துறையில் இந்தியாவின் முதல் பொது-தனியார் கூட்டு நிறுவனம் SHDS ஆகும்.
- அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள நாம்டாபா தேசியப் பூங்கா மற்றும் புலிகள் காப்பகத்தில், கரண்டி வால் கொண்ட அந்திப் பருந்து (கைனகந்தா பேசிகுட்டாடா) எனப்படும் தட்டான் பூச்சியின் முதல் சரிபார்க்கக்கூடிய புகைப்பட ஆதாரம் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், இது இந்தியாவின் தட்டான் பூச்சிகள் பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ளது.
- அர்ஜென்டினாவின் லியோனல் மெஸ்ஸி, 2026 பிஃபா உலகக் கோப்பை இறுதிப் போட்டிக்கு அர்ஜென்டினாவை கொண்டு சேர்த்த பின்பு, 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 அன்று சர்வதேச கால்பந்து போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.
- உஸ்பெகிஸ்தான் தனது உயரிய சிவிலியன் விருதான ஆர்டர் ஆஃப் ஒலி தாராஜாலி தோஸ்ட்லிக் என்பதை பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கியது.


# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாடு சட்டப்பேரவை - மகாமகம் 2028


- சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது 2028 ஆம் ஆண்டு மகாமகத் திருவிழாவிற்கான முன்னேற்பாடுகள் குறித்து தமிழக வேளாண்மைத்துறை அமைச்சர் ஆர்.வினோத் கேள்வி எழுப்பினார்.
- கேள்வி நேரம் என்பது அரசு நிர்வாகம் தொடர்பான விவகாரங்கள் குறித்து சட்டமன்ற உறுப்பினர்கள் எழுப்பும் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதிலளிக்கும் காலமாகும்.
- பொதுவாக, தமிழ்நாடு சட்டப்பேரவை நடைமுறையின் கீழ் கேள்வி நேரத்தின் போது அமைச்சர்கள் கேள்விகளை எழுப்ப முடியாது; சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகர் இந்த விஷயத்தில் ஒரு விதிவிலக்கு அளித்தார்.
- கும்பாபிஷேகத்துக்காக கோவில்களில் பாரம்பரியக் குழுவினர் ஆய்வு செய்து

உள்ளதாகவும், அது தொடர்பான பணிகளை துரிதப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

- ❖ மகாமகம் என்பது கும்பகோணத்தில் நடைபெறும் ஒரு முக்கிய திருவிழாவாகும் என்ற நிலையில் இது 2028 ஆம் ஆண்டில் நடைபெற உள்ளது.




## தமிழ்நாடு வேளாண்மை நடவடிக்கைகள் 2026




- ❖ தமிழ்நாடு வேளாண்மைத்துறை அமைச்சர் ஆர்.வினோத் சட்டப்பேரவையில் பல விவசாய உள்கட்டமைப்பு மற்றும் விவசாயிகளுக்கு ஆதரவான நடவடிக்கைகளை அறிவித்தார்.
- ❖ விதைத் தரம், முளைப்புத் திறன் மற்றும் வீரியத்தை பாதுகாக்க 7 மாவட்டங்களில் ₹11.64 கோடி செலவில் 9 விதை சேமிப்பு கிடங்குகள் அமைக்கப்படும்.
- ❖ கிராமங்களுக்கு அருகிலேயே தரமான விவசாய இடுபொருட்களை வழங்குவதற்காக ₹2.85 கோடி செலவில் விதை சேமிப்பு வசதிகளுடன் கூடிய 4 புதிய துணை வேளாண் விரிவாக்க மையங்கள் கட்டப்படும்.
- ❖ விவசாயிகளுக்கு ₹6.84 கோடி செலவில் 28,500 தேனீ வளர்ப்பு பெட்டிகளும், 2,850 தேன் எடுக்கும் அலகுகளும் வழங்கப்படும்.
- ❖ 5 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு குளிரூட்டப்பட்ட சரக்கு

வாகனங்களுக்கான மானியங்கள் கிடைக்கும், அதே நேரத்தில் 100 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு மின்னணு ஈரப்பதமானிகளை வாங்குவதற்கு ஆதரவு கிடைக்கும்.

# சர்வதேசச் செய்திகள்

## இந்தியா-உஸ்பெகிஸ்தான் உத்திசார் கூட்டாண்மை

- இந்தியாவும் உஸ்பெகிஸ்தானும் தங்கள் உறவுகளை விரிவான உத்திசார் கூட்டாண்மையாக மேம்படுத்தி, 2030 ஆம் ஆண்டிற்குள் $5 பில்லியன் வருடாந்திர வர்த்தக இலக்கை நிர்ணயித்துள்ளன.
- சுரங்கம், சுற்றுலா, கலாச்சாரம், கல்வி, ஆயுர்வேதம் மற்றும் பிற துறைகளை உள்ளடக்கிய 11 ஒப்பந்தங்களில் இரு நாடுகளும் கையெழுத்திட்டன.
- அமைதியான சிவில் அணுசக்தி ஒத்துழைப்புக்காக உஸ்பெகிஸ்தானில் இருந்து இந்தியாவிற்கு நீண்ட கால யுரேனியம் விநியோகத்திற்கான கட்டமைப்பை நிறுவ அவர்கள் ஒப்புக் கொண்டனர்.
- முக்கிய கனிமங்கள், பாதுகாப்பு, விவசாயம், மருந்துகள், சுகாதாரம், தகவல் தொழில் நுட்பம், டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு மற்றும் கல்வி ஆகியவற்றில் ஒத்துழைப்பு விரிவடையும்.
- வணிகர் செலுத்துதல்களுக்காக உஸ்பெகிஸ்தானின் UZQR-ஐ ஸ்கேன் செய்ய UPI செயலிகள் இயக்கப்படும், அதே நேரத்தில் ஆரல் கடல் பகுதியில் காடு வளர்ப்பிற்காக $1 மில்லியன் மானியத்தை இந்தியா அறிவித்தது.
- தெற்கு உஸ்பெகிஸ்தானில் உள்ள ஃபயாஸ் தேபா மற்றும் காரா தேபா பௌத்த தளங்களை பாதுகாக்க இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர்.




## இந்தியா-ரஷ்யா எரிபொருள் வர்த்தகம்

- உக்ரைன் ஆளில்லா விமானத் தாக்குதல்கள் ரஷ்ய சுத்திகரிப்பு நிலைய செயல்பாடுகளை சீர்குலைத்ததால், ரஷ்யாவிற்கு பெட்ரோல் வழங்கும் முக்கிய நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.
- 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ரஷ்யாவின் கடல்வழி பெட்ரோல் இறக்குமதி நாளொன்றுக்கு 125,000 பீப்பாய்கள் என்ற சாதனையை எட்டியது.

- இந்திய சுத்திகரிப்பு நிறுவனங்கள் கடந்த இரண்டு மாதங்களில் சுமார் 1 மில்லியன் பீப்பாய்கள் பெட்ரோலை ரஷ்யாவிற்கு வழங்கியுள்ளன, முக்கியமாக குஜராத்தில் உள்ள வாடினார் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து இது வழங்கப்பட்டுள்ளது.
- 2026 ஆம் ஆண்டு ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் இந்தியா நாளொன்றுக்கு 2.6 மில்லியன் பீப்பாய்களுக்கு மேல் ரஷ்ய கச்சா எண்ணெயை இறக்குமதி செய்தது.
- உள்நாட்டு எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக ரஷ்யா தனது பெட்ரோல் ஏற்றுமதி தடையை 2027 ஆம் ஆண்டு ஜனவரி வரை நீட்டித்துள்ளது.




## ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர் - ஐஸ்லாந்து





- ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவது குறித்த பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குவதற்கான முன்மொழிவை ஐஸ்லாந்து வாக்காளர்கள் நிராகரித்தனர்.
- வாக்கெடுப்பில் 53% வாக்காளர்கள் ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர் பேச்சு வார்த்தைகளை மீண்டும் தொடங்குவதை எதிர்த்தனர்.
- ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர் அந்தஸ்து பணவீக்கம் மற்றும் வட்டி விகிதங்களைக் குறைக்க உதவும் மற்றும் யூரோ மூலம் அதிக பொருளாதார நிலைத்தன்மையை வழங்கும் என்று ஆதரவாளர்கள் தெரிவித்தனர்.

- முழு உறுப்பினர் கடமைகள் இல்லாமல் ஐரோப்பிய ஒன்றிய ஒற்றைச் சந்தை மற்றும் ஷெங்கன் தடையற்ற பயண மண்டலத்திலிருந்து ஐஸ்லாந்து ஏற்கனவே மிகுந்த பயன் அடைகிறது என்று எதிர்ப்பாளர்கள் தெரிவித்தனர்.
- இந்த வாக்கெடுப்பு ஐஸ்லாந்தின் ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர் அந்தஸ்து குறித்த நீண்டகால விவாதத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## வெற்றிட இரட்டை ஒளிவிலகல்

- 1E 1547.0–5408 என்ற காந்த விண்மீனைச் சுற்றி வெற்றிட இரட்டை ஒளிவிலகல் நிகழ்வதற்கான வலுவான ஆதாரங்களை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர், இது குவாண்டம் மின்காந்த இயக்கவியல் (QED) கணிப்பை ஆதரிக்கிறது.
- மிகவும் வலுவான காந்தப்புலம் வெற்று இடத்தை ஒரு படிகத்தைப் போல செயல்படச் செய்து ஒளியின் துருவமுனைப்பை மாற்றும் போது வெற்றிட இரட்டை ஒளிவிலகல் ஏற்படுகிறது.
- சுமார் 14,700 ஒளியாண்டுகள் தொலைவில் அமைந்துள்ள இந்த காந்த விண்மீனில் இருந்து 80% வரையிலான எக்ஸ்ரே துருவமுனைப்பை IXPE செயற்கைக்கோள் கண்டு அறிந்தது.
- இந்த ஆய்வானது NICER மற்றும் ஆஸ்திரேலியாவின் முர்ரியாங் ரேடியோ தொலை நோக்கியையும் பயன்படுத்தியது.
- காந்த விண்மீன்கள் என்பவை மிக சக்திவாய்ந்த காந்தப்புலங்களைக் கொண்ட நியூட்ரான் நட்சத்திரங்களாகும், அவை இந்த குவாண்டம் விளைவைப் படிப்பதற்கான இயற்கையான ஆய்வகங்களாக அமைகின்றன.




## நான்சி கிரேஸ் ரோமன் தொலைநோக்கி

- இருண்ட ஆற்றல், கரும்பொருள், ஈர்ப்பு மற்றும் சூரிய குடும்பத்திற்கு அப்பால் உள்ள கோள்களை ஆய்வு செய்வதற்காக, அடுத்த தலைமுறை ஆய்வகமான நான்சி கிரேஸ் ரோமன் விண்வெளி தொலைநோக்கியை விண்ணில் செலுத்த நாசா தயாராகி வருகிறது.
- நாசாவின் முதல் தலைமை வானியலாளர் நான்சி கிரேஸ் ரோமனின் பெயரால் இது அழைக்கப் படுகிறது, மேலும் இது ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கி மற்றும்

ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி ஆகியவற்றைத் தொடர்ந்து வருகிறது.

- இந்தத் தொலைநோக்கியானது புளோரிடாவில் உள்ள கென்னடி விண்வெளி மையத்திருந்து ஸ்பேஸ்எக்ஸ் பால்கன் ஹெவி ஏவுகலன் மூலம் விண்ணில் செலுத்த திட்டமிடப்பட்டுள்ளதோடு இது பூமியிலிருந்து சுமார் 1.6 மில்லியன் கிமீ தொலைவில் உள்ள லாக்ராஞ்ச் புள்ளி 2-க்கு பயணிக்கும்.
- இதன் முக்கிய ஆய்வு இரண்டு பில்லியன் விண்மீன் திரள்களை உள்ளடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இது பிரபஞ்ச கட்டமைப்புகளின் வளர்ச்சி மற்றும் பிரபஞ்சத்தின் விரிவாக்கம் ஆகியவற்றை ஆய்வு செய்ய அறிவியலாளர்களுக்கு உதவும்.





# சுற்றுச்சூழல் செய்திகள்

## உலகளாவிய பெருங்கடல் வெப்பநிலை

- கோபர்நிகஸ் பருவநிலை மாற்றச் சேவையின் படி, 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22 அன்று உலகளாவிய தினசரி சராசரி கடல் மேற்பரப்பு வெப்பநிலை 21.104°C ஐ எட்டியது.
- கூடுதலாக துருவப் பெருங்கடல் இந்த வெப்பநிலையைப் பதிவு செய்துள்ளது, இது 2024 ஆம் ஆண்டு மார்ச் 1 அன்று அமைக்கப்பட்ட முந்தைய சாதனையான 21.09°C ஐ விடச் சற்று அதிகமாகும்.
- பொதுவாக மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் உலகளாவிய கடல் வெப்பநிலை உச்சத்தை எட்டும் என்பதால் ஆகஸ்ட் பதிவு அசாதாரணமானது; முந்தைய அதிகபட்ச ஆகஸ்ட் மதிப்பு 2023 ஆம் ஆண்டில் 20.98°C ஆக இருந்தது.
- வெப்பமண்டல பசிபிக் பெருங்கடலில் உருவாகும் எல் நினோ நீண்டகால மனிதனால் இயக்கப்படும் பருவநிலை மாற்றத்தால் ஏற்கனவே வெப்பமடைந்துள்ள பெருங் கடல்களுக்கு மேலும் வெப்பத்தை சேர்க்கிறது.

- 1979 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22 அன்று, இதே கடல் பகுதியின் சராசரி வெப்பநிலை 20.15°C ஆக இருந்தது, இது 2026 ஆம் ஆண்டை விட கிட்டத்தட்ட 1°C குளிர்ச்சியாகும்.
- வெப்பமான பெருங்கடல்கள் கடல் மட்ட உயர்வு, கடல் வெப்ப அலைகள், பவளப்பாறை மற்றும் கடற்புல் பாதிப்பு, வலுவான மழை மற்றும் புயல்கள் மற்றும் கடலின் கார்பன் டை ஆக்சைடு உறிஞ்சுதலை குறைத்தல் ஆகியவற்றிற்கு பங்களிக்க முடியும்.




## வனவிலங்கு மறுவாழ்வு மற்றும் பாதுகாப்பு மையம்




- அசாமின் வனவிலங்கு மறுவாழ்வு மற்றும் பாதுகாப்பு மையம் வனவிலங்கு மீட்பு, மறுவாழ்வு மற்றும் பாதுகாப்பின் 25 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.

- காசிரங்கா தேசியப் பூங்கா மற்றும் புலிகள் காப்பகத்திற்கு அருகே உள்ள பன்பாரியில் நிறுவப்பட்ட இந்த மையமானது, கைவிடப்பட்ட மற்றும் காயமடைந்த காட்டு விலங்குகளை கைகளால் வளர்த்து, சிகிச்சையளித்து, விடுவிப்பதற்காக இந்தியாவின் முதல் பிரத்யேக மையமாகும்.
- இது அசாம் வனத்துறை, இந்திய வனவிலங்கு அறக்கட்டளை மற்றும் விலங்குகள் நலனுக்கான சர்வதேச நிதியம் ஆகியவற்றால் கூட்டாக நடத்தப்படுகிறது.
- இந்த மையம் 10,000 க்கும் மேற்பட்ட விலங்குகளை மீட்டுள்ளது மற்றும் அவற்றில் 68% விலங்குகளை மீண்டும் காடுகளில் விடுவித்துள்ளது.
- மானஸ் தேசியப் பூங்காவில் ஒற்றைக் கொம்பு காண்டாமிருகங்களை மீண்டும் அறிமுகப்படுத்தவும், ஆசிய கருப்பு கரடிகள், காட்டு எருமைகள் மற்றும் ஹூலக் கிப்பன்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும் இது உதவியது.

## எல் நினோ அவசரநிலை - ஈக்வடார்




- தொடர்ந்து வரும் எல் நினோ பருவநிலை நிகழ்வு காரணமாக ஈக்வடார் நாடு முழுவதும் சிவப்பு எச்சரிக்கையை அறிவித்தது, இது பதிவு செய்யப்பட்டதில் மிகவும் வலுவானதாக மாறக்கூடும் என்று அதிகாரிகள் எச்சரிக்கின்றனர்.
- எல் நினோ என்பது மத்திய மற்றும் கிழக்கு பூமத்திய ரேகை பசிபிக் பெருங்கடலில் மேற்பரப்பு வெப்பநிலை உயர்ந்து, காற்று, வளிமண்டல அழுத்தம் மற்றும் மழையில் மாற்றங்களை ஏற்படுத்தும் ஒரு பருவநிலை நிகழ்வாகும்.
- இந்த நிகழ்வு மத்திய அமெரிக்காவில் கடுமையான வறட்சியை ஏற்படுத்துகிறது மற்றும் இந்தோனேசியாவில் காட்டுத்தீயை மோசமாக்குகிறது.
- தற்போதைய எல் நினோ 2026 ஆம் ஆண்டின் இறுதிக்குள் உச்சத்தை எட்டும் என்றும் 2027 ஆம் ஆண்டில் சாதனை அளவிலான உலகளாவிய வெப்பத்திற்கு பங்களிக்கும் என்றும் அறிவியலாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.
- ஈக்வடார் தனது அமேசான் பிராந்தியத்தில் வறட்சி மற்றும் காட்டுத்தீக்கு தயாராகி வருகிறது, அதே நேரத்தில் எல் நினோ மீன்பிடித்தல் மற்றும் பறவைகள் இடம் பெயர்வதையும் சீர்குலைக்கலாம்.

- பனாமா, ஹோண்டுராஸ், எல் சால்வடார் மற்றும் பெரு ஆகிய நாடுகளும் எல் நினோ தொடர்பான அவசரநிலைகளை அறிவித்துள்ளன.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## டோரோ மன்னர் ஒயோ மறைவு

- மேற்கு உகாண்டாவில் உள்ள டோரோ பேரரசின் பாரம்பரிய ஆட்சியாளரான கிங் ஓயோ நிம்பா கபாம்பா இகுரு ருகிடி IV தனது 34 வயதில் இறந்தார்.
- அவர் தனது தந்தையின் மரணத்திற்குப் பிறகு 1995 ஆம் ஆண்டில் வெறும் மூன்று வயதில் டோரோவின் மன்னரானார், மேலும் 2010 ஆம் ஆண்டில் அவரது 18 வது வயதில் முறையாக முடிசூட்டப்பட்டார்.
- கின்னஸ் உலக சாதனைகள் மன்னர் ஒயோவை உலகின் இளைய முடிசூடிய மன்னராக பட்டியலிட்டது.
- 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் நிறுவப்பட்ட டோரோ பேரரசு, பரம்பரை முறையைப் பின்பற்றுகிறது மற்றும் உகாண்டாவின் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் கீழ் எந்த அரசியல் அதிகாரத்தையும் கொண்டிருக்கவில்லை.
- மன்னர் ஒயோ டோரோவின் 13 வது மன்னராக இருந்தார் மற்றும் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மக்களை ஆட்சி செய்தார்.




# முக்கிய தினங்கள்

## உலக தேங்காய் தினம் 2026 - செப்டம்பர் 02

- தேங்காயின் விவசாய, பொருளாதார மற்றும் அன்றாட முக்கியத்துவத்தை முன்னிலைப் படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நாள் முதன்முதலில் 2009 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது, ஆசிய மற்றும் பசிபிக் தேங்காய் சமூகத்தின், தற்போதைய சர்வதேச தேங்காய் சமூகத்தின் ஸ்தாபன தினமான செப்டம்பர் 2-ஐ இது குறிக்கிறது.

- தேங்காயின் முற்றியகாய், நீர், சதை, எண்ணெய், உமி, ஓடு, இலைகள் மற்றும் மரம் ஆகியவை பல்வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுவதால், தேங்காய் வாழ்க்கை மரம் என்று அழைக்கப்படுகிறது.
- தேங்காய் ஒரு முக்கியமான வெப்பமண்டல பயிராகும், இது பல நாடுகளில் உள்ள விவசாயிகள், சிறு வணிகங்கள், உள்ளூர் சந்தைகள் மற்றும் தேங்காய் சார்ந்த தொழில்களை ஆதரிக்கிறது.
- இந்தியா, இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகியவற்றுடன் ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியத்தில் உள்ள பிற நாடுகள் முக்கிய தேங்காய் விளையும் நாடுகள் ஆகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★